


# ஆகஸ்ட் 19
# புனித யூட்ஸ் அருளப்பர்
# (1601 - 1680)

இவர் சிறுவர்களுக்கு ஒரு மேல்வரிச்சட்டமாக வாழ்ந்தார். அக்காலத்தில் ஒரு பதித மதம் மிக கண்டிப்பான கொள்கைகளைப் பரப்பி வந்தது என்றாலும் இவர் சிறுவனாக இருக்கும் போதே புதுநன்மை வாங்கினார். பாரிஸ் நகரில் கல்வி பயின்று குருப்பட்டம் பெற்றார். நாட்டில் ஒரு கொள்ளை நோய் பரவியது. நோயாளிகளுக்கு இவர் சிறந்த சேவை செய்து வந்தார். இவர் ஒரு துறவற சபையை நிறுவினார். இச்சபைக் குருக்களின் பணி மக்களுக்கு பொது ஞான ஒடுக்க மறை உரைகள் நிகழ்த்துவதும், குருத்துவ கல்வி நிலையங்களை நடத்துவதும், குருக்களுக்கு ஞான ஒடுக்க பிரசங்கங்கள் செய்வதும் ஆகும். இயேசு மரி இவர்களது திரு இருதய பக்தியின் தந்தை, அறிஞர், அப்போஸ்தலர் என்று புனித பத்தாம் பத்திநாத பாப்பு இவரை அழைத்தார். பெண்களுக்கென்று ஒரு கன்னியர் சபையை ஏற்படுத்தினார். அதிலிருந்து நல்லாயன் கன்னியர் சபை உற்பத்தி ஆயிற்று. இச்சபைக் கன்னியர் நல்ல ஆயனான இயேசுவின் திரு இருதயத்தைப் போல இரக்கமுள்ளவர்களாக இருந்து, தவறிய பாவிகளை ஆதரித்துக் காப்பாற்ற வேண்டும்.

திரு இருதய பக்தியானது இரட்சகரது திறக்கப்பட்ட விலாவிலிருந்து ஆரம்பமாயிற்று நம் புனிதர் இப்பக்திக்கு புதுத் திருப்பத்தைத் தொடங்கி வைத்தார். புனித ஜெர்த்துருத், புனித மெக்தில்தம்மாள் இவர்களிடம் திரு இருதய பக்தி இருந்தது. சுவிசேஷகரான புனித அருளப்பர் ஒரு நாள் புனித ஜெர்த்துருத் அம்மாளுக்கு தோன்றி "நான் இயேசுவின் மார்பின் மீது தலைசாய்த்திருக்கையில் அவரது இதய துடிப்புகளைக் கேட்டேன். அந்த இதய துடிப்புக்களின் ஆசை பிற்காலத்தில் வெளிப்படை ஆகும். உலகமானது கடவுளின் அன்பை மறந்து திரியும் போது திருஇருதயத்தின் அன்பு வெளிப்படுத்தப்பட்டு மக்களின் உள்ளங்களில் தேவ சிநேகத்தை எழுப்பும்" என்றார்.

சிந்தனை: வேலையாக நீ யாரையாவது அணுக வேண்டியிருந்தால் முதலில் நீ அவருடைய காவல் தூதரையும் அவரது பெயரைக் கொண்டிருக்கும் புனிதரையும் நோக்கி செபித்துக் கொண்டு போ, உனது வேலை கடவுளது மகிமைக்காக நன்கு முடிய அவர்கள் இருவரும் கடவுளை மன்றாடுவார்கள். (புனித யூட்ஸ் அருளப்பர்)

செபம்: இயேசுவின் திருஇருதயமே, நீரே எங்கள் நம்பிக்கை.